


08.12. 2024

தலைப்புச் செய்திகள்

- எல்லை பாதுகாப்பு படையினரின் வீரம், துணிச்சல் மற்றும் தியாகம் மிகு சேவையால் நாட்டின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.
- பஹ்ரைனில் நடைபெறும் மனாமா பேச்சுவார்த்தையில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் இன்று பங்கேற்கிறார்.
- தமிழக சட்டப்பேரவை நாளை கூடுகிறது.
- கடலூர் மாவட்டத்தில் ஃபென்ஜல் புயல் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய குழுவினர் இன்று ஆய்வு செய்து வருகின்றனர்.
- மஸ்கட்டில் நடைபெறும் மகளிர் ஜூனியர் ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

********

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி ஜெய்பூரில் நடைபெறும் ராஜஸ்தான் குளோபல் உச்சிமாநாட்டை நாளை தொடங்கிவைக்கிறார்.

3 நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் நிலையான நீடித்த வளர்ச்சி, வேலை வாய்ப்பு மேம்பாடு உலகளாவிய முதலீடுகளை ஈர்ப்பது புதிய ஸ்டார்ட் அப் நிறுனங்களை தொடங்குவது உள்ளிட்டவை குறித்த விரிவான விவாதங்கள் இடம்பெறுகின்றன.

ஆஸ்திரேலியா, எகிப்து, ஃபின்லான்ட் ஜெர்மனி உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தொழில் நிறுவன பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

தொடர்ந்து பிரதமர் பானிபட்டில் பீமா சகி யோஜனா திட்டத்தை தொடங்கிவைக்க உள்ளார்.

ஹரியானா மாநிலம் கர்னாலில் மஹாராணா பிரதாப் தோட்டக்கலை பல்கலைகழகத்தின் புதிய வளாகத்திற்கும் பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

********

அமித்ஷா

எல்லை பாதுகாப்பு படையினரின் வீரம், துணிச்சல் மற்றும் தியாகம் மிகு சேவையால் நாட்டின் எல்லை பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

ஜோத்பூரில் இன்று நடைபெற்ற எல்லை பாதுகாப்பு படையின் 60-வது ஆண்டு நிறுவன தின அணிவகுப்பு நிகழ்ச்சியில் பேசிய அவர், எல்லை பாதுகாப்புடன் ஊடுருவல், கள்ளநோட்டுகள், இடதுசாரி ஊடுருவலை தடுப்பது உள்ளிட்ட பல்வேறு பணிகளையும் அவர்கள் மேற்கொண்டு வருவதாக கூறினார்.

எல்லை பகுதிகளில் உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதில் மத்திய அரசு சிறப்பு கவனம் செலுத்திவருவதாக குறிப்பிட்ட அமைச்சர் இதற்கென பட்ஜெட்டில் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சிறந்த சேவையாற்றிய 7 பேருக்கு விருதுகளையும் அமைச்சர் வழங்கினார்.

********

ராஜ்நாத்சிங்

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் ரஷ்யாவில் மூன்று நாள் அரசுமுறை பயணம் மேற்கொள்கிறார்.

இந்திய கப்பல் படைக்காக ரஷ்யா தயாரித்த அதி நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய துஷில் போர்கப்பலை கலினின்கிராட் கப்பல் கட்டும் தளத்தில் இருந்து இந்திய கடற்படையில் இணைக்கும் நிகழ்ச்சியில் நாளை அவர் பங்கேற்கிறார்.

இரு நாடுகளுக்கிடையே நடைபெறும் ராணுவ ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்கும் அவர், அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ஆன்ட்ரே பெலோஸோவுடன் ராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்பு உள்ளிட்டவை குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

********

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் பஹ்ரைனில் நடைபெறும் மனாமா பேச்சுவார்த்தையில் இன்று பங்கேற்கிறார்.

இதுகுறித்து சமூகவலைதள பதிவில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில் இந்த பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக இருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

தமது பயணத்தின் முதற்கட்டமாக நேற்று கத்தார் தலைநகர் தோஹாவில் உரையாற்றிய அவர் அமெரிக்க டாலருக்கு போட்டியாக புதிய கரன்சியை அறிமுகப்படுத்தும் எண்ணம் எதுவும் பிரிக்ஸ் நாடுகளுக்கு இல்லை என்று தெளிவுபடுத்தினார்.

********

பியூஷ்கோயல்

மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் மும்பையில் இன்று நார்வே தூதர் மே எலின்ஸ் ஸ்டெனரை சந்தித்து இருநாடுகளுக்கிடையே வர்த்தகத்தை எளிதாக்குதல், எல்லை தாண்டிய உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல், கூட்டாண்மை உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

********

UPI

நாட்டில் டிஜிட்டல் பண பரிவர்த்தனைகளால் சீரான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் UPI நிறுவனம் வெற்றிகரமாக செயல்பட்டு வருவதாக IIM மற்றும் ISB மேற்கொண்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

UPI மூலம் முதல்முறையாக கடன் பெறுபவர்களும், குறைந்த உறுப்பினர்கள் கொண்ட குழுக்களும் எளிய முறையில் கடன்பெறுவதற்கான வழிமுறைகள் ஏற்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலும் ஃபின்டெக் முறையை பின்பற்றி கடன் வழங்குவதில் இந்தியா முக்கிய பங்கு வகிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் 30 கோடி தனிநபர்களும், 5 கோடி வணிக நிறுவனங்களும் UPI பரிவர்த்தனைகளை கடந்த 2016ஆம் ஆண்டுமுதல் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

********

அஷ்டலக்ஷ்மி

வடகிழக்கு மாநிலங்களின் கலாச்சார வளத்தையும் பொருளாதார வளர்ச்சியையும் பிரதிபலிக்கும் அஷ்டலக்ஷ்மி திருவிழா இன்று நிறைவடைகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கிய இவ்விழாவில் வடகிழக்கு மாநிலங்களின் கைவினை பொருட்கள், கைத்தறி, வேளாண் தோட்டக்கலை உற்பத்தி பொருட்கள் காட்சிபடுத்தப்பட்டுள்ளன.

********

சட்டப்பேரவை

தமிழக சட்டப்பேரவை நாளை கூடுகிறது.

நடப்பாண்டில் ஏற்பட்ட கூடுதல் செலவுகளுக்கான துணை பட்ஜெட்டை மாநில நிதியமைச்சர் திரு.தங்கம் தென்னரசு தாக்கல் செய்ய உள்ளார்.

இரண்டு நாட்கள் மட்டுமே நடைபெறும் இக்கூட்டத்தொடரில் மதுரை டங்ஸ்டன் சுரங்க உரிமையை உடனடியாக ரத்து செய்ய கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ளதாக தெரிகிறது.

நாளை மறுநாள் பட்ஜெட் மீதான விவாதம் இடம்பெறுகிறது.

********

மத்திய குழு

கடலூர் மாவட்டத்தில் ஃபென்ஜல் புயல் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய குழுவினர் ஆய்வு செய்து வருகின்றனர்.

பரண்டை, மேல்பட்டாம்பாக்கம், அழகியநத்தம் உள்ளிட்ட இடங்களில் பொதுமக்களிடம் புயல் பாதிப்புகள் குறித்து கேட்டறிந்தனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்றுமாலை நடைபெறும் ஆய்வுக்கூட்டத்திலும் இக்குழுவினர் பங்கேற்கின்றனர்.

********

மீனவர்கள் கைது

நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்த ராமேஸ்வரத்தை சேர்ந்த 8 மீனவர்களையும், அவர்களது 2 படகுகளையும் இலங்கை கடற்படையினர் இன்று அதிகாலை பிடித்து சென்றுள்ளனர்.

இம்மீனவர்கள் காங்கேசன் துறை கடற்படை முகாமிற்கு அழைத்து செல்லப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.

தமிழக மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

********

ராமதாஸ்

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் துணைமின் நிலையங்கள் மற்றும் மின்பாதைகள் அமைக்கும் பணிகளை தனியார் மூலம் செயல்படுத்தக்கூடாது என்று பா.ம.க.நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இப்பணிகள் தனியார் மூலம் செயல்படுத்தப்படும்போது பொதுமக்கள் கூடுதல் மின் கட்டணம் செலுத்தும் நிலை ஏற்படும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

********

திருவண்ணாமலை

திருவண்ணாமலை அண்ணாமலையார் மலையில் புவியியல் நிபுணர்கள் குழு இன்று மேற்கொண்டுள்ள ஆய்வு முடிவுகள் பெறப்பட்ட பின்னரே கார்த்திகை தீபத்திருவிழா அன்று 2 ஆயிரத்து 500 பேருக்கு மலையேறுவதற்கான அனுமதி வழங்கப்படும் என்று ஆட்சித்தலைவர் திரு.பாஸ்கர பாண்டியன் தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

இதனிடையே தீபத்திருவிழாவை ஒட்டி வரும் 12ஆம் தேதிமுதல் 15ஆம் தேதிவரை திருவண்ணாமலைக்கு 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது.

மேலும் நகரில் இருந்து கிரிவல பாதையை இணைக்கும் வகையில் 40 கட்டணமில்லா சிற்றுந்துகள் இயக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாளைமுதல் 9 நாட்களுக்கு திருவண்ணாமலையில் உள்ள பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

********

இருவரி

பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாய மின்மோட்டார்களை எங்கிருந்து வேண்டுமானாலும் கைபேசி வழியாக இயக்கும் கருவிகளை மானியத்துடன் பெறுவதற்கு வேளாண் பொறியியல் துறை உதவி பொறியாளரிடம் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் பிரதமரின் தொழில் பழகுநர் பயிற்சிக்கான சேர்க்கை முகாம் நாளை நடைபெறுகிறது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் காவல்துறையில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் ஏலம் வரும் 18ஆம் தேதி நடைபெற உள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

சிவகங்கை மாவட்ட அரசு பள்ளி கல்லூரி மாணாக்கரை தேர்ந்தெடுக்க ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் ஆர்வம் காட்டி வருவதாகவும் இதனை மாணாக்கர் பயன்படுத்திக்கொள்ளுமாறும் ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் அறிவுறுத்தியுள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் உண்மை தண்மை குறித்து வாக்காளர் பட்டியல் கண்காணிப்பு அலுவலர் திருமதி சோபணா இன்று கள ஆய்வு மேற்கொண்டார்.

********

வரையாடு

உதகையில் தமிழ்நாடு வரையாடு திட்டத்தின் கீழ் வரையாடுகளுக்கு ரேடியோகாலர் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

********

கோவில்

ஈரோடு மாவட்டம் பவானி அருள்மிகு செல்லியாண்டியம்மன் திருக்கோவில் கும்பாபிஷேகம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

திரளான பக்தர்கள் இதில் கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

********

வானிலை

தென்கிழக்கு வங்ககடல் பகுதியில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு பகுதி வரும் 11ஆம் தேதி மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து இலங்கை தமிழக கடலோர பகுதியில் நிலவக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு.செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

********

ஹாக்கி

மஸ்கட்டில் நடைபெறும் மகளிர் ஜூனியர் ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

இந்தியா நாளை மலேசியாவையும்

வரும் 11ஆம் தேதி சீனாவையும்

வரும் 12ஆம் தேதி தாய்லாந்தையும் எதிர்கொள்கிறது.

********

கிரிக்கெட்

அடிலைடில் இந்தியாவிற்கு எதிரான பார்டர் கவாஸ்கர் கோப்பைக்கான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒருபோட்டியில் வெற்றிபெற்று சம நிலையில் உள்ளன.

3ஆவது போட்டி வரும் 14ஆம் தேதி பிரிஸ்பேனில் தொடங்குகிறது.

********

செஸ்

உலக செஸ் சேம்பியன்சிப் போட்டியில் இந்தியாவின் குகேஷ் - நடப்பு சாம்பியன் சீனாவின் டிங் லிரன் இடையேயான 11ஆவது ஆட்டம் சிங்கப்பூரில் இன்று பிற்பகல் இரண்டரை மணிக்கு தொடங்குகிறது.

********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

********